கூட, அதைப்பற்றி "இந்து" பத்திரிகையில் பார்த்தேன். விவசாயிகள் தங்களுடைய வெங்காய விளைச்சலை இனமாகவே எடுத்துப்போங்கள் என்று சொல்லும்போது, சிலோனுக்கு கொடுப்பதற்கு எக்ரிமெண்ட் செய்து பம்பாய் மூலமாகச் செல்ல ஏற்பாடு செய்தபிறகு, மற்ற தேசங்களிலிருந்து அதற்கு அதிகமான விலை கொடுக்க ஆஃபர் செய்ததால், முன்பு செய்ததை கான்சல் செய்துவிட்டு விட்டதாக பேப்பரில் பார்த்தேன். ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக ஆந்திர முதலமைச்சர் ஒப்பந்தம் செய்திருப்பதாகச் சொன்னார்கள். ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாகச் செய்வதால் வெளிநாடுகளில் ஏற்படுகிற நஷ்டம் அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். அதற்கும் சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். அந்த முறையில் இங்கே செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அடிப்படையான அம்சத்தை நாம் புறக்கணிக்கக் கூடாது. விளைவு அதிகரிக்கிறது. விவசாய உற்பத்தி அடிப்படையில் விலைகள் தருவதற்கு முடியும். எப்படி வெளியே பொருள்களை அனுப்பி நம்முடைய விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று இந்த அரசாங்கம் யோசித்து முயற்சிக்கும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : சென்ற ஆண்டு மிளகாய் விலை கூடிய காரணத்தால் கொழும்புக்கு ஏற்றுமதி செய்ய மறுத்தோம், பாகிஸ்தானும், சீனுவும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சப்ளை செய்து வருகிறது. அவற்றுடன் போட்டி போடத்தக்க அளவில் இலங்கையில் வியாபாரத்தைத் துவக்க அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தமிழக அரசிற்கு அத்தகைய அதிகாரம் இருந்தால் அதைச் செய்திருக்கும். இருந்தாலும் மாநில அரசின் வரம்புக்கு உட்பட்டு மத்திய அரசின் ஒத்துழைப்புடன் செய்ய இயன்றதை செய்ய முயற்சி எடுத்துக்கொள்வோம்.

Supply of rice to plantation workers of Kanyakumari district

*141 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state — 3–30 p.m.

(*a*) whether the Kanyakumari district plantation workers decided to launch a strike on account of the non-supply of rice to them ; and

(*b*) the action taken to distribute rice to those workers ?

கன்னியாகுமரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அரிசி வினியோகம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் கன்னியாகுமரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்கள் அரிசி கிடைக்கவில்லையென வேலை நிறுத்தம் செய்வதென தீர்மானித்தனரா?

(இ) இவர்களுக்கு அரிசி வினியோகம் செய்ய எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) அரிசி வழங்கப்படாததால் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அச்சுறுத்திய நிகழ்ச்சி எதுவும் அரசாங்கத்தின் நாட்டத்திற்கு வரவில்லை.

(இ) கன்னியாகுமரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு வாரத்திலும் அரிசி ஒழுங்காக வழங்கப்பட்டு வருகிறது.